பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

24 03 2025 **MONDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வெங்காய ஏற்றுமதிக்கான வரி ரத்து செய்யப்பட்டுள்ளது விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க உதவிடும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

2. தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தலைமையில் அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் பங்கேற்ற கூட்டம் இன்று சென்னையில் நடைபெற்றது.

3. ஊடகவியலாளர் சவுக்கு சங்கர் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்திற்கு மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தின் ஏழு மாவட்டங்களில் வெள்ள பாதிப்பை குறைக்கும் பணிகள் 131 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்று நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் கூறியுள்ளார்.

5. உலகக்கோப்பை Sepak Takraw சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று வெண்கலப்பதக்கம் வென்றது.

---- *இனி விரிவான செய்திகள்* --

<<<<<<>>>>>>

வெங்காய ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த 20 சதவீத வரி அடுத்த மாதம் ஒன்றாம் தேதிமுதல் முழுமையாக விலக்கிக்கொள்ளப்படும் என்ற அறிவிப்பு விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க உதவிடும் என்று வேளாண்துறை அமைச.ர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியிட்டுள்ள காணொலி பதிவில், 40 சதவீதமாக இருந்த வரி, 20 சதவீதமாக குறைக்கப்பட்டு தற்போது முழுமையாக ரத்து செய்யப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

இதற்கான அறிவிக்கையை நிதியமைச்சகம் வெளியிட்டிருப்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

விவசாயிகளின் நலனில் பிரதமர் திரு நரேந்திர மோடி தனிகவனம் செலுத்தி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக ஜவுளித்துறை இணையமைச்சர் திரு Pabitra Margherita கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், தேசிய கைத்தறி மேம்பாட்டுத்திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டில் 192 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த திட்டத்தின்கீழ், 60 வயதை பூர்த்தி செய்த நெசவாளர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுவதாகவும் திரு Pabitra Margherita தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

ஊடகவியலாளர் சவுக்கு சங்கர் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்திற்கு மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில், திமுக அரசின் ஊழல்களையும், முறைகேடுகளையும் வெளிப்படுத்துவோர் மீது அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்படுவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் உள்ள திரு சவுக்கு சங்கர் இல்லத்தில் அத்துமீறி நுழைந்த கும்பல் மீது காவல்துறை நடவடிக்கை எடுக்காமல் இருப்பது அப்பட்டமான பழிவாங்கும் செயலாகும் என்று கூறியுள்ளார்.

இந்த வன்முறையை நடத்தியவர்கள் மீது எவ்வித பாரபட்சமும் இன்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு எல். முருகன் கோரியுள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமியும் இந்த தாக்குதல் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ள யாரும் இதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று கூறியுள்ளார்.

இந்த தாக்குதலுக்கு காரணமானவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலையும் சமூக வலைதளத்தில் இந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஒருவர் வீட்டில் அத்துமீறி நுழைந்து மூன்று மணிநேரம் கடந்தும் காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் யாருடைய தூண்டுதலின்பேரில் இது நடைபெற்றது என்பதை உணர முடிவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கை தொடர்வது நல்லதல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்திற்கு காரணமானவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு அண்ணாமலை கோரியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஏழு மாவட்டங்களில் வெள்ள பாதிப்பை குறைக்கும் பணிகள் 131 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்று நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் கூறியுள்ளார்.

இன்று சட்டப்பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாத்திற்கு பதிலளித்து பேசுகையில் இதற்கான அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

ஈரோடு, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், தென்காசி, தூத்துக்குடி, திருச்சி, வேலூர் ஆகிய மாவட்டங்களில் இந்த பணிகள் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

மாநிலம் முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் செயற்கை முறையில் நிலத்தடி நீரை மேம்படுத்தும் வகையில் ஆழ்துளை கிணறுகள் ஆறு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்றும் திரு துரைமுருகன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தலைமையில் அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் பங்கேற்ற கூட்டம் இன்று சென்னையில் நடைபெற்றது.

தேர்தல் பணிகளை மேலும் சிறப்பாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் குறித்து இதில் விவாதிக்கப்பட்டது.

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது, வாக்காளர் பட்டியலில் உள்ள பிழைகளை நீக்குவது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இதில் ஆலோசிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

கடலோர பாதுகாப்பு தொடர்பாக பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மத்திய தொழிலக பாதுகாப்புப்படையினரின் சைக்கிள் பேரணி தமிழகத்திற்கு இன்று வந்தது.

இந்த பேரணியில் பங்கேற்றுள்ளது உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் அளிப்பதாக மத்திய தொழிலக பாதுகாப்புப்படையின் உதவி ஆய்வாளர் ராஜலட்சுமி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - ராஜலட்சுமி – 52 செகண்ட்ஸ்)*

இந்த சைக்கிள் பேரணி, வரும் 31-ஆம் தேதி கன்னியாகுமரியில் நிறைவடைகிறது.

<<<<<<>>>>>>

சென்னை அறிவியல் விழா நாளை மறுநாள் தொடங்கி, வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் 40-க்கும் மேற்பட்ட கல்வி மற்றும் ஆராய்ச்சிக்குழு நிறுவனங்கள் பங்கேற்பதாக அதன் ஒருங்கிணைப்பாளர் திரு தேவா எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - தேவா – 39 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்திற்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 35 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனுக்குடன் தீர்வுகாணுமாறு ஆட்சியர் திருமதி அழகுமீனா அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

------------------

தூத்துக்குடி மாவட்டத்தில் காசநோய் கண்டறியப்பட்டவர்களில் 87 சதவீதம் பேர் குணமடைந்துள்ளதாக ஆட்சியர் திரு இளம்பகவத் கூறியுள்ளார்.

----------------

திருப்பூர் மாவட்டத்தில் காசநோய் தொடர்பான செவிலியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

-----------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தடை செய்யப்பட்ட குட்கா பொருட்களை வைத்திருந்தது தொடர்பாக இரண்டு பெண்களை காவல்துறையினர் கைது செய்தனர்.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை Sepak Takraw சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று வெண்கலப்பதக்கம் வென்றது.

பாட்னாவில நடைபெற்றுவரும் இப்போட்டியின் கலப்பு குழு பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

-----------------

கேலோ இந்தியா பாரா விளையாட்டுப்போட்டியில் தமிழகத்தின் பிரகதீஸ்வர ராஜா மற்றும் தங்கபாண்டி தங்கப்பதக்கம் வென்றனர்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 100 மீட்டர் ஓட்டத்தில் அவர்கள் இப்பதக்கத்தை கைப்பற்றினர்.

மகளிர் 200 மீட்டர் ஓட்டத்தில் அமுல்யா ஈஸ்வரி வெண்கலப்பதக்கம் வென்றார்.

--------------

இந்திய மகளிர் கிரிக்கெட் அணிக்கான ஊதிய ஒப்பந்தங்களை கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

இதன்படி, Harmanpreet Kaur, Smriti Mandhana, மற்றும் Deepti Sharma "ஏ" பிரிவில் இடம்பெற்றுள்ளனர்.

--------------

இந்தியன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Veer Chotrani இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மும்பையில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-6, 11-7, 11-2 என்ற செட் கணக்கில் இந்தியாவின் சூரஜ்குமார் சந்த்-ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் தன்வி கண்ணா-வும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<END>>>>>>